## சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்

O.S. No. 867/2024 நாள்- 26.03.2026

**பி.வா.சா.2. மாரியப்பன்**

**குறுக்கு விசாரணை வாதி தரப்பில்**

தாவா வழக்கு பற்றிய விவரங்கள் எனக்கு தெரியும். செட்டியார் பட்டி கிராமம் இந்திரா நகரில் குடியிருந்து வருகிறேன் வாதியின் தகப்பனார் எனக்கு உறவினர் என்றால் சரிதான். வாதியின் தகப்பனார் ரெடிமேட் தொழில் செய்து வந்தார். வாதியும், தகப்பனாரும் சேர்ந்து தான் அந்த ஜவுளி தொழிலை செய்து வந்தார்கள் என்றால் ஆரம்பத்தில் செய்து வந்தார்கள். கனகராஜ் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் பற்றிய விவரங்கள் தெரியும் என்றால் வீடு, கடை பற்றிய விவரம் தெரியும். உயில் எழுதுவது சம்பந்தமாக கனகராஜ் தான் முந்தைய வாரம் தகவல் என்னிடம் கூறினார். அவ்வாறு தகவல் சொல்லும் போது நானும், கனகராஜ் மட்டும் தான் உடன் இருந்தோம் வேறு நபர்கள் இல்லை. உயில் எழுதவேண்டும் தான் சொன்னார் ஆனால் எப்போது எழுத வேண்டும் என்று என்னிடம் கூறவில்லை. அதன் பின்பு உயில் எப்போது எழுத வேண்டும் என்று சொன்னாரா என்றால் 2011 வருடம், 11 மாதம் 29 தேதியில் உயில் எழுதுவதாக கூறினார். உயில் எழுதுவதற்கு நானும் கனகராஜூம் வண்டியில் இருசக்கர வாகனத்தில் சென்றோம் நானும் கனகராஜூம் சார்பதிவாளர் அலுவலகத்தில் நேரடியாக சென்றுவிட்டோம். பத்திர அலுவலகத்தில் நான் சென்ற பின்பு தான் உயில் ஆவணம் தயார் செய்யப்பட்டது. உயில் ஆவணம் தயார் செய்யும் போது கனகராஜ் என்னென்ன ஆவணங்கள் கைவசம் வைத்திருந்தார் என்று கேட்டால் எனக்கு தெரியாது. பத்திர அலுவலகத்தில் நானும், கனகராஜ் மற்றும் ஒரு நபர் இருந்தார் அவர் யார் என்று எனக்கு தெரியாது. பத்திர அலுவலகத்திற்கு செல்லும் போது சுமார் 11.00 மணிக்கு மேல் இருக்கும். பத்திர எழுத்தர் பெயர் தெரியாது. பத்திர எழுத்தர் அலுவலகம் சேத்தூர் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு எதிரே உள்ளது. உயில் ஆவணம் எழுதுவதற்கு நேரடியாகவே உயில் ஆவணம் எழுதப்பட்டது. உயில் ஆவணத்தில் என்னென்ன சொத்துக்கள் சொல்லப்பட்டுள்ளன என்ற விவரம் எனக்கு தெரியும். உயிலில் என்னென்ன சொத்துக்கள் யார்யாருக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியும். பத்திரம் எழுதும் போது 2 ம் பிரதிவாதி விமல்ராஜ் உடன் இருந்தார் என்றால் பத்திர

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.

அலுவலகத்தில் கையெழுத்து செய்யும் போது வந்தார். வாதி வினோத்குமார் அந்த இடத்திற்கு வரவில்லை என்றால் சரிதான். கனகராஜ் உயில் எழுதும் விவரம் வினோத்குமாருக்கு தெரியுமா என்று கனகராஜிடம் கேட்டேனா என்றால் கேட்கவில்லை. உயில் ஆவணத்தில் விமல்ராஜ்க்கு கடையும், வீடும் ஒதுக்கப்பட்டுள்ளது. அந்த கடை கார்மேகநாடார் தெருவிலும், வீடு இந்திரா நகரிலும் உள்ளது. வாதிக்கு உயிலில் எந்த சொத்தும் ஒதுக்கப்படவில்லை. கனகராஜிடம் வினோத்குமாருக்கு சொத்து ஏன் ஒதுக்கவில்லை என்று கனகராஜிடம் கேட்ட போது வினோத்குமார் பிரச்சனை செய்ததால் எழுதிக் கொடுக்கவில்லை என்று கூறினார். உயில் எழுதுவதற்கு 6 மாதம் முன்பாகவே கனகராஜ் உடல்நிலை சரியில்லாமல் இருந்து உயில் எழுதிய 3 மாதத்தில் இறந்துவிட்டார் என்றால் சரிதான். நான், 2 ம் பிரதிவாதியுடன் பேசிக்கொள்வேன். வாதியிடம் நான் பேசுவது இல்லை. உண்மையிலேயே வாதியின் தகப்பனார் 29.09.2011 அன்று 2 ம் பிரதிவாதி பெயருக்கு எவ்வித உயில் ஆவணம் எழுதி வைக்கவில்லை என்றும், நான், 2 ம் பிரதிவாதி ஆகியோர் வஞ்சக கூட்டு சேர்ந்து நல்ல உடல் நிலையில் இல்லாத கனகராஜை தூக்கி கொண்டு சென்று மோசடியான உயில் ஆவணம் உற்பத்தி செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. உயில் ஆவணத்தின் அடிப்படையில் சொத்துக்களை விமல்ராஜ் அனுபவம் செய்து வருகிறார். வரி ரசீதுகள் கனகராஜ் பெயரில் தான் இருக்கிறதா என்றால் எனக்கு தெரியாது. 2 ம் பிரதிவாதி நண்பர் என்பதால் 2 ம் பிரதிவாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

ஒப்பம் .திரு.M.சண்முகவேல்ராஜ்,B.A.,B.L.,L.L.M.,
இராஜபாளையம்.